4. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரின்ஸ். மாண்புமிகு அமைச்சரின் கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை அணையைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆழிசூழ் உலகத்து ஆருயிர் எல்லாம் வாழி" என வாழ்த்தி, வளம் சேர்க்கும் வள்ளல் தாய்! ஊழி பெயரினும் தான் பெயரா உறுதியுடன் தமிழ் உலகம் காக்கும் புண்ணியத்தின் பொக்கிஷம்! (மேசையைத் தட்டும் ஒலி) பூவுலகின் அதிசயம்! மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் படிப்பதற்கு விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணை 1897 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1906 ஆம் ஆண்டு கோதையாற்றின் குறுக்கே கல்லாறு, சித்தாறு மற்றும் குட்டியாறு இணையும் இடத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இவ்வணை சுண்ணாம்பு, செங்கல் மற்றும் ஜல்லி கற்காரையினால் கட்டப்பட்டு, அணையின் உள்புறம் சுண்ணாம்புக் கலவையினால் பூசப்பட்டது. இந்த அணையைக் கட்டும்பொழுது

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 3

இதன் கொள்ளளவு 3,509 மில்லியன் கன அடியாகும். இதன் உயரம் 42 அடியாகும். இந்த அணையின்மூலம் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம், தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களிலுள்ள சுமார் 50,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. இந்த அணை கட்டும்போது மொத்தச் செலவினம் ரூபாய் 26.1 இலட்சம் ஆகும். பிறகு, இந்த அணையின் உயரமானது 42 அடியிலிருந்து 48 அடி உயரமாக ரூபாய் 15 இலட்சம் செலவில் உயர்த்தப்பட்டு, இதன் கொள்ளளவு 4,350 மில்லியன் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இதன்மூலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு-1 மற்றும் சித்தாறு-2 ஆகிய அணைகளின் மொத்தக் கொள்ளளவையும் சேர்த்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம், தோவாளை, விளவங்கோடு மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்கள் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம் ஆகிய வட்டங்களிலுள்ள மொத்தம் 96,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த அணையில் 1936 ஆம் ஆண்டு முதல் கிரௌட்டிங் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு இதன் கசிவு நீர் வினாடிக்கு 3.26 கன அடியிலிருந்து வினாடிக்கு 0.05 கன அடியாகக் குறைந்தது. 1953 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை இரண்டாவதாக கிரௌட்டிங் பணி மேற்கொள்ளப்பட்டது. அப்போது வினாடிக்கு 1.18 கன அடியிலிருந்த கசிவு நீர் வினாடிக்கு 0.66 கன அடியாகக் குறைந்தது. பின்னர், அணையின் உள்புறத்தில் இரசாயனக் கலவை பூசி கசிவு நீரைக் குறைக்கும் பணி 938.86 சதுர மீட்டர் பரப்பளவில் ரூபாய் 82.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டது.

மேலும், பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக அரசாணை எண் 200, பொதுப் பணித் துறை, நாள் 29-11-2014-ன்மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, வேப்கோஸ் (WAPCOS) நிறுவனம் (A Government of India undertaking) மூலம் ஆரம்பகட்ட ஆய்வுப் பணிகளும் மற்றும் வண்டல் படிமத்தின் அளவீடு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திட்ட விவர அறிக்கை வேப்கோஸ் (WAPCOS) நிறுவனம்மூலம் பெறப்பட்டு ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் தூர் வாரும் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். உண்மையான சில செய்திகளை நான் சொல்ல விரும்புகிறேன். பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான அரசாணை எண் 200 பிறப்பிக்கப்பட்டு, அந்தப் பணியைத் துவக்குவதற்கு அரசு எடுத்த முயற்சிக்கு நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

பேச்சிப்பாறை அணையை கட்டும் பணி திருவிதாங்கூர் ஸ்ரீமூலம் திருநாள் மன்னர் காலத்தில் 1897 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1906 ஆம் ஆண்டு முடிவடைந்தது. வெளிநாட்டைச் சார்ந்த பொறியாளர் திரு. ஹம்ரே அலெக்சாண்டர் மிஞ்சின் அவர்கள் அந்த அணையைக் கட்டினார். முதலாவதாக 42 அடி உயரத்தில் கட்டப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அதிகமான தண்ணீர் வரத்து இருந்ததாலும், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதற்காகவும் கூடுதலாக 6 அடியுடன் சேர்த்து 48 அடியுடன் அந்த அணை தற்போது உள்ளது.

முற்பகல் 11-55

தோவாளைக் கால்வாய், நாஞ்சில்நாடு புத்தனாறு கால்வாய், அருந்தன் கால்வாய், பத்மநாபபுரம் புத்தன் கால்வாய், இடதுகரைக் கால்வாய் ஆகிய பகுதிகளைச் சார்ந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் இவற்றால் பாசன வசதி பெற்று வருகின்றன. வற்றாத ஜீவ நதியான கோதையாறு, குத்தியாறு, சிற்றாறு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள், ஊர் பெயர்களையெல்லாம் படித்துக்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) இல்லை. அந்த அணை குறித்த கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே மழைக் காலத்தில் அதிக தண்ணீர் வந்தாலும், அதை சேமித்து வைப்பதற்கு முடியவில்லை. 48 அடி அளவிற்கு அங்கே தண்ணீர் நிரப்பப்படுவதாக

இருந்தாலும், சுமார் 30 மில்லியன் கன அடிக்கு அதிகமாக வண்டல் மண் நிறைந்துள்ளதால், தண்ணீரை முழு அளவிற்கு சேமித்து வைக்க முடியாத நிலைதான் உள்ளது. ஆகவே, மழைக் காலங்களில் வீணாக தண்ணீரை கடலுக்கு திறந்துவிடுகின்ற நிலைதான் உள்ளது. இதனால் வறட்சிக் காலங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. ஆகவே, பேச்சிப்பாறை அணையில் நிரம்பியுள்ள மணல் மற்றும் வண்டல் மண்ணை தூர் வாரினால், அரசுக்கு 30 மில்லியன் கன அடி மணல் கிடைக்கும். அதன்மூலம் அரசுக்கு வருமானமும் கிடைக்கும். ஆகவே, அதிகமாக தண்ணீரை சேமித்து வைப்பதற்கு வசதியாக, தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பேச்சிப்பாறை அணையின் பரப்பளவு 207.19 சதுர கிலோ மீட்டரும், கொள்ளளவு 4,350 மில்லியன் லிட்டர் கன அடியுமாகும். இந்த அணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கல்குளம், விளவங்கோடு, தோவாளை, அகஸ்தீஸ்வரம் மற்றும் நெல்லை மாவட்டத்தில் ராதாபுரம் தாலுகா உட்பட 96 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தற்போது, இவற்றில் மணல் மற்றும் வண்டல் நிறைந்த காரணத்தினால், 25 சதவிகிதம் நீரின் கொள்ளளவு குறைந்துள்ளது. இந்த அணையைத் தூர் வாரி, இந்த அணையில் கிடைக்கின்ற மணல் குமரி மாவட்ட மக்களின் கட்டுமானப் பணிகளுக்காக எடுக்கப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில், கோரிக்கை வைத்தபோது, ஐந்தரை கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து இந்த அணை தூர் வாரப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 2012-ல் அறிவித்தார்கள். அதுமட்டுமல்ல, 2012-ல் நவீன நீர்வள ஆதாரத் துறை, Principal Chief Engineer உலக வங்கி உதவியுடன் பேச்சிப்பாறை அணையை இரண்டாம் கட்டத்தில் (Phase-II) புனரமைக்க. . .

2015 செப்டம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் உரை போன்று பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-11-2014-ல்* WAPCOS *நிறுவனத்தின்மூலம் நடத்தப்பட்ட ஆரம்பகட்ட ஆய்வுப் பணியோடுதான் இப்போது இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த ஆய்வுப் பணியை உடனடியாக நிறைவு செய்து, அணையின் நீர்ப் பிடிப்பை அதிகப்படுத்தி 96 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நடைபெறும் விவசாயத்தை வளப்படுத்தவும், குமரி மாவட்டத்தின் மணல் தேவையைப் பூர்த்தி செய்யவும், குடிநீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், பேச்சிப்பாறை அணையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அதனைத் தூர் வாரவும் வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசினுடைய கவனத்திற்கு நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்களுடைய ஏகோபித்தத் தீர்ப்பின்மூலம் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, தமிழகத்தில் இருக்கின்ற நீர்நிலைகள் எல்லாம் அதனுடைய முழுக் கொள்ளளவை எட்டுகின்ற வகையில், அணைகளாக இருந்தாலும் சரி, ஏரிகளாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் தூர் வாரப்பட்டு அவை உருவாக்கப்பட்டபோது ஏற்கெனவே எந்த அளவிற்கு அவற்றின் கொள்ளளவு இருந்ததோ, அதனை திரும்பக் கொண்டு வர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, இன்றைக்குப் படிப்படியாக அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதன் அடிப்படையில் பேச்சிப்பாறை அணை கட்டி முடிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்ட நிலையிலும்கூட, அது தற்போது நல்ல நிலையில் வலுவாக உள்ளது.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 3 நண்பகல் 12-00

மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான ஆணையினை ஏற்று, வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர், அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு ஆகிய நீர்நிலைகளைத் தூர் வாருவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஆய்வுப் பணிகளை விரைவுபடுத்துதல், ஒப்பந்தப்புள்ளி கோருதல் தொடர்பான ஆவணங்கள் தயாரித்தல், ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடு செய்ய உதவுதல் போன்ற பணிகளுக்காகவும், திட்ட மேலாண்மை குறித்த ஆலோசனைப் பணிகள் தொடர்பான விரிவான அறிக்கைகளை WAPCOS, அதாவது Water and Power Consultancy Services என்ற மத்திய அரசினுடைய நிறுவனத்திற்கு ஆலோசனைப் பணிகளை வழங்குவதற்காகவும், திட்ட மேலாண்மை குறித்த குறிப்புகளைத் தயாரிப்பதற்காகவும் அந்த நிறுவனத்திற்கு அரசாணை நிலை எண் 200, பொதுப் பணித் துறை, நாள் 29-11-2014-ன்மூலம் 8 கோடியே 34 இலட்சத்து 83 ஆயிரத்து 480 ரூபாய்க்கு நிதி ஒப்பளிப்பு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதனை ஏற்கெனவே நான் விரிவான அறிக்கையின் மூலமாகத் தந்திருக்கின்றேன். அதன்படி மேற்படி நிறுவனம்மூலம் பேச்சிப்பாறை அணையைத் தூர் வாருவதற்கான ஆரம்ப கட்ட ஆய்வுப் பணிகளும் மற்றும் வண்டல் படிவத்தினை அளவீடு செய்யும் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. திட்ட விவர அறிக்கை WAPCOS நிறுவனம்மூலம் பெறப்பட்டு, ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், தூர் வாரும் பணிகள் விரைந்து துவக்கப்படும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அடிப்படையில்தான் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டும் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனுடைய விரிவான திட்ட அறிக்கை அரசுக்குத் தரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அங்கே தூர் வாரும் பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனையும் நான் இங்கே கூடுதல் தகவலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அணையைத் தூர் வாருவதைப் பற்றித்தான் இங்கே கேட்டார்கள். இதற்கும்மேலாக

2015 செப்டம்பர் 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு அம்மா அவர்கள் இம்மாதிரியான அணைகளுடைய கட்டமைப்புகளைச் சீர் செய்து, அவற்றுக்கான பணிகளையெல்லாம் நிறைவாக செய்து முடித்து, குறிப்பாக, அந்த அணை புதிய பலத்தோடு விளங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, அந்தப் பணியும் DRIP-Dam Rehabilitation and Improvement Project என்ற திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு, பேச்சிப்பாறை அணையினை, அணை புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புனரமைக்க ரூ.4,509 இலட்சம், அதாவது ரூ.45 கோடியே 9 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, உலக வங்கியினுடைய ஒப்புதலுக்கு 19-6-2015 அன்று அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்டபின், 45 கோடி ரூபாய் என்ற அளவிற்குச் செய்யப்படுகின்ற பணிகளாக, பேச்சிப்பாறை அணையின் நீர்க் கசிவினைத் தடுக்க, அணையின் சுவற்றின் முன்பக்க முகப்பில் சிறப்புப் பூச்சுப் பணிகள் மேற்கொள்ளுதல், பேச்சிப்பாறை அணையின் உபரி நீரை ஆற்றில் திருப்பிவிட நீர்போக்குச் சுவர் Grade wall மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டுதல், அணுகு சாலை பழுதுபார்த்தல், கட்டடங்கள் கட்டுமானத்தைப் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், அணை வளாகத்தைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் அமைத்தல், அணையின் shutters மற்றும் நடைமேடைப் பகுதிகளைப் புதுப்பித்தல் மற்றும் மின்சார அமைப்புகளைப் புதுப்பித்தல், அணையில் கூடுதல் வழிந்தோடி அமைத்தல் மற்றும் அணையின் சுவற்றில் குழைவேற்றல்-grouting பணிகளை மேற்கொள்ளுதல், அணையின் நிலைப்புத் தன்மையினை அதிகரிக்க அணைக்குக் கூடுதல் அணைப்புச் சுவர் shutter wall கட்டுதல், Generator, வெள்ள அபாய எச்சரிக்கைக் கருவி, இடிதாங்கி, தன்னியக்க நீர்மட்ட அளவு, பதிவு செய்யும் கருவி, வானிலை விவரங்கள் பதியும் கருவி ஆகியவை கொள்முதல் செய்தல் ஆகிய இதரப் பணிகளை மேற்கொள்ளுதலும், அந்தப் பணிகளில் அடங்கியிருக்கின்றன. உலக வங்கி ஒப்புதல் பெறப்பட்டவுடன் இந்தப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையினை ஏற்று, தமிழகத்தினுடைய

பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற 14,098 ஏரிகளில், கடந்த 4 ஆண்டுகளில் 3,430 ஏரிகள் தூர் வாரப்பட்டு, புனரமைக்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு, பணிகள் சிறப்பான முறையில் நடைபெற்றிருக்கின்றன என்பதனைக் கூடுதல் தகவலாக நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

இவ்வாறாக பணிகள் முடிக்கப்பட்ட சில ஏரிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆய்வுகளின் முடிவில் நீர் கொள்ளளவுத் திறன் 4 விழுக்காடு முதல் 7 விழுக்காடு வரையில் அதிகரித்துள்ளது என்பதையும் அறிய முடிகிறது என்கிற தகவலையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். பேச்சிப்பாறை அணையினுடைய விரிவான திட்ட மதிப்பீடு WAPCOS நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றவுடன், அந்தப் பணி விரைந்து மன நிறைவு அளிக்கின்ற வகையில் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

6. மானியக் கோரிக்கைகள், 2015-2016, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*